திக்வெல்ல பிரதேச சபை - 2022

-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திக்வெல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, திக்வெல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 13 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 606,825 தொகைக்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் கணக்கீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட அறிவித்தல் பலகைக் கட்டணத்தை அறவீடு செய்த பின்னர் 2023 நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது அப்புறப்படுத்தப்பட்ட ரூபா 2,867,155 இற்கான பெறுமதியை உடைய 08 மோட்டார் வாகனங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இருந்து அகற்றாமல் மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 22,805,000 தொகை பெறுமதியான 06 காணித் துண்டுகள் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட தகவல்களை கண்டறிந்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டு இருந்த ரூபா 3,804,825 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | 2023 நிதிக்கூற்றுக்களின் மூலம் மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்காத கழிவறை வசதிகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 1,500,000 தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 118,090 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்கூறிய கொடுப்பனவுக்காக வங்கி நிலையியல் கட்டளை ஒன்று செயற்படுத்தப்பட்டதுடன், அந்த கொடுப்பனவுகள் உட்பட வங்கிக் கூற்று ஜனவரி மாதம் கிடைக்கப் பெறுவதால் திசெம்பர் மாதம் தொடர்பாக இந்த வித்தியாசம் காட்டப்படுகின்றது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய கூட்டுத்தொகை ரூபா 378,257,147 தொகைக்கான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 203,651,509 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரிவான அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 403,290,155 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 132(ஏ) மற்றும் 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 இலக்கங் கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரிவு 03(xvii) | திக்வெல்ல பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் விளையாட்டில் திறமை காட்டிய பாடசாலை மாணவர்களை மதிப்பீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடைபெற்ற கொண்டாட்டத்திற்காக பிரதேச சபை நிதியத்தில் இருந்து ரூபா 282,135 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்தததுடன் அதற்காக அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. மேலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆளுனரினால் தொலைபேசி மூலம் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் நடாத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டமையால் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போனது எனவும் பின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 45,788,643 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 75,375,089 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 7,847,400 | 4,069,966 | 3,571,612 | 2,672,202 | 7,885,900 | 3,958,100 | 2,621,835 | 2,173,848 |
| ii. | வாடகை | 8,036,590 | 4,200,221 | 3,887,151 | 1,459,675 | 7,557,300 | 3,472,550 | 4,070,295 | 1,146,605 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,392,000 | 559,750 | 559,750 | - | 2,236,000 | 717,000 | 717,000 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 6,857,000 | 20,223,707 | 20,141,62 | 164,160 | 7,377,000 | 8,076,481 | 158,918,925 | 82,080 |
| | மொத்தம் | 25,132,990 | 29,053,644 | 28,160,140 | 4,296,037 | 25,056,200 | 16,224,131 | 166,328,055 | 3,402,533 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 2,173,848 தொகையாகக் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 2,672,202 தொகையாக இருந்தது. | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவிடப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்குச் சொந்தமான 61 கடையறைகளில் இருந்து ரூபா 1,319,455 இற்கான நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பந்தி 06 இற்கு இணங்க சபைக்கு சொந்தமான 51 கடையறைகள் தொடர்பாக சுற்றறிக்கைக்கு இணங்க வாடகைத் தொகை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | புதிய பெறுமதி மதிப்பீட்டிற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,190,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 80,137,980 தொகை காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 152 இன் கீழ் தொலைபேசி செலுத்துகை தூண்கள் பேணிச் செல்வதற்காக 03 கம்பனிகளினால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த 09 தூண்களுக்காக ரூபா 33,000 இற்கான வர்த்தக வரி அறவீடு செய்திருக்கவில்லை. | 02 நிறுவனங்கள் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரிய கொடுப்பனவுகளை ஒரே தடவையில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளதுடன், ஒரு நிறுவனத்திற்கு இறுதி ஞாபகமூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கு இணங்க முச்சக்கர வண்டிகளை பதிவு செய்தல் தனியார் மற்றும் ஆயர்வேத மஸாஜ் நிலையங்கள் நடாத்திச் செல்லல், சீதகல்ல நீச்சல் தடாகம் பேணல் மற்றும் நகர்சார் அல்லாத பிரதேசங்களில் கட்டிட வரைபுகள் அங்கீகரித்தல் மற்றும் காணி துணைப் பகிர்வுகள் தொடர்பான அலுவல்களுக்காக துணை விதிகள் சட்ட ஆக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒன்றியத்தின் மூலம் துணை விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது என. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 பெப்ரவரி மாதம் வரை தனியார் காணி ஒன்றில் குப்பைகள் குவிக்கப்பட்டு வந்ததுடன், அதற்கு விரோதமாக ஏற்பட்டிருந்த பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக குப்பைகள் சேகரித்தல் நிறுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவிலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் உருவாகக் கூடிய | தனியார் காணி ஒன்று வாடகைக்கு எடுத்து அங்கு நாளாந்தம் சேகரமாகும் குப்பைகளை போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிரந்தர மற்றும் முறைசார் குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குப்பைகளை சேகரிப்பதற்கு மற்றும் உரிய முறையில் அப்புறப்படுத்துவதற்கு முறையான செய்முறை ஒன்றிற்காக திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | | |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு பண்டக் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட திக்வெல்ல பிரதேச சபை தலைமை அலுவலகம், திக்வெல்ல பிரதேச சபை முன்பள்ளி மற்றும் ரதம்பல நெனசல நிலையம் ஆகியவற்றிற்கு உரிய பற்றாக்குறைகள் என இனங்காணப்பட்டிருந்த ரூபா 116,215 தொகை பெறுமதியான 23 வகையான பண்டங்களை சேர்ந்த 144 விடயங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 760 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 வருடாந்த பண்டக் கணிப்பீட்டு சபை பரிந்துரையின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவு 02(iv) இன் ஏற்பாடுகளுக்கு புறம்பாக விரள் அடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தாமல் 17 நாட்களுக்காக பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 39,344 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தினவரவுப் பதிவேட்டில் மாத்திரம் கையொப்பம் இடப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் சபையினால் திக்வெல்ல பொது விளையாட்டுத் திடலில் சிறுவர் பூங்காவில் மற்றும் முன்பள்ளியில் பாதுகாப்பு வேலிகள் நிர்மாணித்தல் திக்வெல்ல பொது விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது அனைத்து வேலைப் பகுதிகளையும் இனங்கண்டு மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்காமல் | இந்த செயற்திட்டங்கள் நிறைவேற்றுதல் சபையில் காணப்படும் நிதியத்தின் எண்ணிக்கையின் அளவில் மற்றும் காலரீதியாக ஏற்படும் தேவைப்பாடுகளின் படி மதிப்பீடு தயாரித்து செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது என. | மொத்த கிரய மதிப்பீடு தயாரித்து கேள்வி அழைப்பின் மூலம் ஒப்பந்த வேலைகள் வழங்கும் போது போட்டி அடிப்படையிலான கூறுவிலைகளின் மூலம் கிடைக்கக் கூடிய நலன்களை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 16,155,404 இற்கான பெறுமதிக்காக 11 மதிப்பீடுகள் தயாரித்து 02 சமூக அமைப்புக்கள் மூலம் மதிப்பீட்டுத் தொகைக்கு செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சீனாவின் உதவியின் கீழ் மாத்தறை – கதிர்காம புகையிரதப் பாதையின் காரணமாக அழைவடைந்த பாதைகளை மறுசீரமைப்பதற்காக கிடைத்திருந்த ஏற்பாடுகள் மீது மற்றும் சபை நிதியத்தின் ஏற்பாடுகள் மீது மீளாய்வாண்டின் போது ரூபா 5,976,545 இற்கான மதிப்பீட்டுத் தொகைக்கு நேர் ஒப்பந்த அடிப்படையில் சமூக அடிப்படை அமைப்பினால் கொங்கிரீட் விரிப்பு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த 03 பாதைகளின் 2022 நவம்பர் 17 திகதி மேற்கொள்ளப்பட்ட கொங்கிரீட் கன அளவைப் பரிசோதனையின் போது (core cutting test) பெற்றுக் கொள்ளப்பட்ட 15 மாதிரிகளில் 06 இன் கொங்கிரீட் விரிப்பு மதிப்பீட்டுக்கு இணங்க 0.125 மீற்றர் அளவில் காணப்படவில்லை. | ஒரு பாதை தொடர்பாக குறைவாக காணப்பட்ட கன அளவுக்கான தொகையினை ஒப்பந்த சங்கத்தில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இரண்டு பாதைகளின் கன அளவு குறைவாக இருந்த பகுதிக்காக கொங்கிரீட் கன அளவுக்காக குறைத்து தடுத்து வைக்கப்பட்ட பணம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | நிர்மாண வேலைகள் உரிய நியமங்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | சீனாவின் உதவியுடன் மாத்தறை– கதிர்காமம் புகையிரத செயற்திட்டம் செயற்படுத்தும் போது அழைவடைந்த பாதைகளை மறுசீரமைப்பதற்காக 2015 மற்றும் 2020 காலப் பகுதியில் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 12,000,000 தொகை கிடைத்திருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் மீதியாகக் காணப்பட்ட ரூபா 6,100,110 இற்கான தொகை சபைக்குக் கிடைத்து 02 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மீதியான பாதைகளை அபிவிருத்தி செய்திருக்கவில்லை. | 2020 ஆண்டின் போது ரூபா 1,018,708 தொகைக்கான 03 செயற்திட்டங்களும் 2022 ஆண்டின் போது ரூபா 1,936,222 தொகைக்கான ஒரு செயற்திட்டமும் மேற்கொள்ளப்பட்டது எனவும். 2023 ஆண்டின் போது நிறைவேற்றுவதற்காக ரூபா 8,698,733 இற்கான மதிப்பீட்டு பெறுமதி ஒன்றைக் கொண்ட 05 செயற்திட்டங்கள் மேற்கொள்வதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது என. | விரைவாக செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுகாதார தொழிலாளர் இருவருக்கு மற்றும் சாரதி உதவியாளர் ஒருவருக்கு பதவிக்குரிய கடமைகள் சாட்டப்படாமல் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், அதற்காக | சேவைகளின் தேவைப்பாட்டின் படி மீது கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என. | பதவிக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது ரூபா 4,461,486 இற்கான தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த மற்றும் இறந்துள்ள 08 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 803,350 இற்கான கடன் மீதி பலவருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது. | நிலுவையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | விரைவாக அறவிடப்பட வேண்டும். |